உ
கணபதி துணை.

திருஞானசம்பந்தர்

திருவாய்மலர்ந்தருளிய

கோளறு திருப்பதிகம்

(மூலமும் உரையும்)



வெளியீட்டாளர்:
T. S. சங்கரசுப்பிரமணியம்
பேப்பர், நோட்புக்ஸ் & ஜெனரல் மர்ச்சண்ட்ஸ்
எண் 5, தேரடி வீதி, திருப்பாதிரிப்புலியூர்.

இலவச வெளியீடு.

1961—62.

பதிப்பாசிரியர்:

வித்துவான் – க. சம்பந்தம்

தமிழாசிரியர்,

தூய தாவீது உயர்நிலைப்பள்ளி,

கடலூர் O. T.

உ
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.



திருஞானசம்பந்தர் அருளிய

கோளறு திருப்பதிகம்

இஃது

கடலூர் முதுநகர்

ஸ்ரீ காசி விஸ்வநாத சுவாமிக்கு

(நிகழ் பிலவ ஆண்டு தைத்திங்கள் 23ல்
அட்டக்கிரகங்கள் மகர ராசியில் சேருவதால்
உண்டாம் துயர்தீர) மார்கழி தொடங்கி
நடைபெறும்

இலட்சார்ச்சனையின் போது

வெளியிடப்பட்ட

இலவச வெளியீடு.

உ

சிவமயம்.

கோளறு திருப்பதிக வரலாற்றுக் குறிப்பு.

சைவசமய குரவர் நால்வர். அவர் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்பவராவர். இந்நால்வரும் சைவமும் தமிழும் தழைக்க, சமுதாயம் செழிக்க பல அருந்தொண்டாற்றினர்கள். பல அற்புதங்கள் புரிந்தார்கள். ஒரு சமயம் சமணம் பரவியிருந்த பாண்டி நாட்டிலிருந்து அடியார் சிலர் மதுரைக்கு வந்து திருமறைக் காட்டிலிருந்த ஞானசம்பந்தரை, அழைத்தபோது, அதற்கு இசைந்து அவர் புறப்படவே உடனிருந்த நாவரசர் "நீவிர், இளம்பாலகர்" ஆண்டில் முதிய என்னையே பொல்லாத அமணர் இன்னல் பலபுரிந்து வருத்தினர். மேலும் இது போழ்து நாளும், கோளும் சரியில்லை. ஆதலின் அமண் சமயம் தழைத்துள்ள பாண்டி நாடு போதல் தக்கதன்று என்று நட்புரிமையால் தடைசெய்தார். அதற்குப் புகலிவேந்தர் திரு நீற்றுச் செம்மை நெறியே திருவருள் துணைக் கொண்டொழுகும் சிவனடியாரை நாளுங் கோளும் நலிவுறுத்தா. அவை அடியார்க்கு நல்லனவே புரியுந் தகையன என்ற கருத்தமைய "*வேயுறு தோளிபங்கன்*" என்று தொடங்கும் பதிகம் பாடி அப்பரிடம் விடைபெற்று மறைக்காட்டீசரை வணங்கி அடியார் குழுவுடன் பாண்டிநாடு ஏகினர்.

பாண்டி நாட்டில் மதுரைக்கருகில் மடத்தில் தங்கிய சிவனடியாரைத் தீக்கிரையாக்க எண்ணிய அமணர் அம்மடத்திற்குத் தீயிடலும் அதனைச் சீகாழிச்செம்மல் "*பையவே சென்று பாண்டியர்க்காகவே*" என்றார். அங்ஙனமே பாண்டியன் வெப்புநோய்க்காளாயினன். பின் அவன் நோய் தணிக்க இயலாது அமணர் திகைக்க, பாண்டிமாதேவியான மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் வேண்டிக்கொண்ட வேண்டுகோட்கு இணங்க, ஆளுடைப்பிள்ளையார் திருநீற்றைக்கொண்டு திருநீற்றுப் பதிகம் பாடி பாண்டியன் சுரநோய் போக்கி அமணர்களை அனல் வாதம், புனல் வாதம் செய்து வென்று, சமணத்தை ஒடுக்கி சைவத்தை மீண்டும் தழைக்கச் செய்தருளினர். பின் பாண்டியன் சைவனாக மாறி சமணத்தை ஒழித்து ஞானசம்பந்தரைப் போற்றிப் பரவி சைவமும் தமிழும் தழைத்தோங்க வகைபுரிந்தான். காழிப்பிள்ளையரும் ஆலவாய் அண்ணலை வணங்கித் தலங்கள் பல கண்டு பதிகம்பாடி தம்நாடு மீண்டார்.

இங்ஙனம் சிவபெருமானின் திருவருள் வலத்தால் திருநீற்றைத் துணைக்கொண்டு நாள்களையும் கோள்களையும் வென்றார் ஞானசம்பந்தர். அவர் பாடிய பதிகத்தில் ஒன்பது கோள்களும், கெட்ட விண்மீன்களும், திசைத் தெய்வங்களும், துட்ட மிருகங்களும், இடி, மின்னல், கொடு நோய், மலை, கடல் முதலியனவும், பிரம்ம, விஷ்ணு முதலான தேவர் களும் அடியார்கட்கு நன்மை யுண்டாக்குவார்களேயன்றி ஒருபோதும் தீமை யுண்டாக்க மாட்டார்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆகையால் வரும் தைத்திங்கள் மகர ராசியில் இராகு தவிர மற்றை எட்டுக்கோள்களும் ஒன்று கூடுவதால் நேரும் இன்னல்களால் துன்புறு திருக்க சைவம் தழைக்கும் தருமையாதீனகர்த்தர் அவர்களும், காஞ்சி-காமகோடிபீடம்-ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களும் இட்ட திரு வருள் ஆணையின்படி *இம்மார்கழி முதல் தை இருபத்து மூன்றாம் நாள் வரை* ஆத்திக அன்பர்கள் இக்கோளறு திருப்பதிகத்தை நாடோறும் காலை மாலை அன்புடன் இறைவன் திருமுன் பொருளுணர்ந்து பண்ணுடன் பாராயணம் செய்து வருதல் தக்கது. இப்பதிகப் பாடல்கட்குப் பிண்ட மாகப்பொழிப்புரையும் தரப்பட்டுள்ளது. எனவே அன்பர்கள் இவ்விலவச வெளியீட்டைப் பெற்று நாளும் ஓதி துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் இறைவன் இன்னருளால் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்ளப் படுகின்றார்கள்.

இப்பணியில் அடியேனை ஈடுபடுத்தி இவ்வெளியீட்டினை இலவச மாக வெளியிட்டு வழங்கும் தமிழ்ப் பேரன்பர் திருவாளர் T. S. சங்கர சுப்பிரமணியப்பிள்ளை அவர்கட்கு என் நன்றி உரித்து. இப்பதிக உரைக் குறிப்பினை "குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்" என்ற தமிழ்மறையின்படி கொள்ளுமாறு அடியேன்வேண்டிக் கொள்கின்றேன். சுருங்கியகாலத்தில் இதனை அச்சிட்டுத்தந்த புலிசை ஸ்ரீ கிருஷ்ணவிலாசம் பிரஸ் உரிமையாளர் அவர்கட்கும் என் நன்றி.

"ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே"

இங்ஙனம்

அன்பன் கு. சம்பந்தம்.

உ
திருச்சிற்றம்பலம்.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

"கோளறு திருப்பதிகம்"

(பண்–பியந்தைக் காந்தாரம்)

திருச்சிற்றம்பலம்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன் மிகநல்லவீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேலணிந்தென் உளமேபுகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டு
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே. [முடனே

பொழிப்புரை: (1)

மூங்கில் போன்ற தோளையுடையவள் உமாதேவி. அவளை இடப்பாகத்தே கொண்டவன் சிவபெருமான். அவன் ஆலகால விடத்தை உண்டருளிய கழுத்தினன். நல்ல வீணை வாசிப்பவன். பிறை நிலா, கங்கை இவற்றைத் தன் முடியில் சூடிக்கொண்டு இருப்பவன். அத்தகையவன் என் எளிய உள்ளத்திலும் விரும்பி உறைகின்றான். அதனால் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகிய நவ கோள்களும் (கிரகங்களும்) அடியார்கட்கு குற்றமற்ற நல்லகோள்களே. அவை ஒன்பதும் நமக்கு நல்லனவே. நல்லனவே.

என்பொடு கொம்பொடாமை யிவைமார்பிலங்க எருதேறியேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடிவந்தென் உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொடாறும் உடனாயநாள்க ளவை
அன்பொடு நல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே. [தாம்

பொழிப்புரை: (2)

எலும்புகள், கொம்புகள், ஆமை ஓடு இவைகளால் ஆகிய மாலையை அணிந்த மார்பினன். பொன் போன்ற தாதுக்கள் நிறைந்த ஊமத்தமலரையும், கங்கையையும் தன் திருமுடியில் சூடினவன். அவ்விறைவன் உமாதேவியுடன் இடப வாகனனாய் என் உள்ளம் புகுந்து உறைகின்றான். அதனால் ஆயிலியம், மகம், விசாகம், கேட்டை, திருவாதிரை என்ற விண்மீன்களும் பரணி, கார்த்திகை, மூப்பூரம், (பூரம், பூராடம், பூரட்டாதி) சித்திரை சுவாதி ஆகிய நட்சத்திரங்களும் கூடிய நாட்களெல்லாம் அடியார்கட்கு நல்ல நாட்களே. அவை யனைத்தும் அன்பு செய்யத்தக்க நல்ல நாட்களே. நல்ல நாட்களே.

உருவளர் பவளமேனி ஒளிநீறணிந்து உமையோடும்வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேலணிந்தென் உளமேபுகுந்த அதனால்
திருமகள் கலையதூர்திசெய மாதுபூமிதிசை தெய்வமான பலவும்
அருநெதி நல்லநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.

பொழிப்புரை: (3)

சிவபிரான் பவளம் போன்ற அழகு மிக்க செந்நிற மேனியன்; அம்மேனியில் பால் போன்ற வெண்ணீறணிந்துள்ளான்; மணம் மிக்க கொன்றை மலருடன் மூன்றாம் பிறையையும் சூடிய முடியினன். அவ்விறைவன் உமாதேவியுடன் வெண்ணிறமான தருமவிடை ஏறி எளிய என்னுள்ளத்திலும் விரும்பி உறைகின்றான். அதனால் திருமகள், கலைமகள், கொற்றவை, அவர்கள் தம் வாகனங்கள், பூதேவி, திசைத் தெய்வங்கள் ஆகிய யாவும் அடியார்கட்கு அரிய செல்வத்தை அளிப்பனவே. ஆதலின் அவை அனைத்தும் அடியார்களாகிய நமக்கு என்றும் நல்லனவே. நல்லனவேயாகும்.

மதிநுதல் மங்கையோடுவட வாலிருந்துமறை யோதும்எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலைமுடி மேலணிந்தென்உள மேபுகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடுதூதர் கொடுநோய்களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.

பொழிப்புரை: (4)

பிறை நிலாப்போன்ற நெற்றியினள் பார்வதி. அவளுடன் வடவாலமரத்தின் நிழற்கீழிருந்து நான்மறையினை சனகாதி முனி புங்கவர்கட்கு ஓதுகின்றான் எங்கள் பரமேஸ்வரன். அவன் கங்கையோடு கொன்றை மாலையையும் திருமுடியில் அணிந்துகொண்டு எளிய என் உள்ளம் புகுந்தமர்ந்து வாழ்கின்றான். அதனால் கோபம் மிக்க காலன், நெருப்பு, இயமன், அவன் தூதர்கள், கொடுமை வாய்ந்த தீரா நோய்கள் ஆகிய பலவும் வந்தனவாயினும் அடியார்களாகிய நமக்கு நற்குணம் உற்ற நல்லவைகளே, அவை நல்லவைகளேயாகும்.

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள்தனோடும் விடையேறுநங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேலணிந்தென் உளமேபுகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும்மின்னும் மிகையானபூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.

பொழிப்புரை: (5)

ஆலகால விடமுண்டருளிய அழகிய கழுத்தினன்; எங்கள் தந்தை. உமையுடன் இடபம் ஏறிவரும் நம்முடைய பரமேஸ்வரன். அவன் இருள் தூங்கும் பசுமையான வன்னி இலையையும், கொன்றை மலரையும் தன்முடியில் சூடி என் உள்ளமே இடமாகக் கொண்டு எழுந்தருளியுள்ளான். அதனால் கொடிய கோபமுடைய அவுணர்களோடு, பெரிய இடி, மின்னல், கொடுமை மிக்க பூதங்கள் (வெள்ளம், நில நடுக்கம், அனற்காற்று, புயல், பெருந்தீ முதலிய) ஆகிய அஞ்சத்தக்க யாவும் அடியார்களாகிய நமக்கு நல்லனவே, அவை நன்மை புரிவனவே; நன்மை புரிவனவே.

வாள்வரி யதளதாடை வரிகோவணத்தர் மடவாள்தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடிவந்தென் உளமேபுகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானைகேழல் கொடுநாகமோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.

பொழிப்புரை: (6)

ஒளியுடன் கூடிய வரிக்கோடுகளையுடையது புலி; அப்புலியைக் கொன்று அதன் தோலை இடையில் ஆடையாக உடையவர்; வரிந்து கட்டிய வெண்கோவணத்தை உடையவர்; அன்றலர்ந்த மலர்களையும் வன்னி இலையுடன் கொன்றை மலர்களையும், கங்கையையும் திருமுடியில் சூடியுள்ளார்; பார்வதி சமேதராய் அவர் என் எளிய உள்ளம் புகுந்து உறைகின்றார். அதனால் சிங்கம், புலி, கொலைபுரியும் யானை, காட்டுப்பன்றி, கொடியவிட நாகங்கள், கரடி, ஆண்சிங்கம் ஆகிய கொடிய விலங்கினங்கள் யாவும் அடியார்களாகிய நமக்கு தீமை புரியமாட்டா. நன்மை செய்பனவே. அவை யாவும் நல்லனவே. நல்லனவே.

செப்பிள முலைநன்மங்கை யொருபாகமாக விடையேறுசெல்வ னடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமேலணிந்தென் உளமேபுகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம்மிகை யானபித்தும்வினை யர்னவந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.

பொழிப்புரை: (7)

சிமிழ் போன்ற தனத்தினள் உமாதேவி. அவளை இடப்பாகமாகக் கொண்டு இடபவாகனம் ஏறிவரும் செல்வன் சிவபெருமான். முறையாகத் தன்னை வந்தடைந்த பிறை நிலாவையும் கங்கையையும் திருமுடியில் சூடிக் கொண்டு அப்பெருமான் எளிய என் உள்ளம் புகுந்துறைகின்றான். அதனால் வெம்மையான சுரநோய், குளிர், வாதம், அதிக பித்தம், வினையால் வரும் தீரா நோய்கள் ஆகிய யாவும் அடியார்களை அப்படியாக வந்து துன்புறுத்தமாட்டா. அவைகள் அடியார்க்கு நல்லனவேயாகும். நல்லனவேயாகும்.

வேள்பட விழிசெய்தன்று விடைமேலிருந்து மடவாள்தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடிவந்தென் உளமேபுகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்றனோடும் இடரானவந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.

பொழிப்புரை: (8)

பண்டு மன்மதன் உருவம் அழிந்துபோக நெற்றிக்கண்ணைக் காட்டினான் இறைவன். அன்று உமை யொரு பாகனாய்த் தோன்றிய அவ்விறைவனே இன்றும் ஒளிபொருந்திய பிறை நிலாவையும், வன்னி இலை, கொன்றைமலர் இவைகளையும் திருமுடியில் சூடிக்கொண்டு உமையோடு இடபவாகனம் ஏறி என் உளம் புகுந்து வாழ்கின்றான். அதனால் ஏழு கடல்களாலும் சூழப்பட்ட இலங்கையை ஆண்ட இராவணனுடன் மேலும் துன்பமானவையாவும் வந்தாலும் அவை அடியார்களாகிய நம்மைச் சிறிதும் வருத்தமாட்டா. அவை அடியாரவர்க்கு மிகவும் நல்லனவே. நல்லனவே.

பலபல வேடமாகும் பரனாரிபாகன் பசுவேறும்எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கும் முடிமேலணிந்தென் உளமேபுகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடுதேவர் வருகாலமான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே. (9)

பொழிப்புரை:

அன்பர்கள் விருப்பிற்கு ஏற்ப பரமன் பற்பல வேடங்கொள்கின்றான். அவன் உமாதேவியை ஒருபாகம் உடையவன். இடபத்தின்மேல் ஏறி வந்து காட்சி கொடுத்தருளுகின்றான் எங்கள் பரமேஸ்வரன். அவன் கங்கையுடன் வெள்ளெருக்கு மலரையும் திருமுடியில் சூடிக்கொண்டு என் எளிய உள்ளத்தையும் இடமாகக்கொண்டு எழுந்தருளியுள்ளான். அதனால் பிரமன், திருமால், வேதங்கள், தேவர்கள், முக்காலங்கள், அலைகடல்கள், மேருமலை ஆகியவர் யாவரும் அடியார்களுக்கு நலம் புரிபவர்களே. நலம் புரிபவர்களே மற்றையனவும் அடியார்க்கு நல்லனவே. நல்லனவே.

கொத்தலர் குழலியோடு விசையற்குநல்கு குணமாயவேட விகிர்தன்
மத்தமு மதியுநாகம் முடிமேலணிந்தென் உளமேபுகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல் திருநீறுசெம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே. (10)

பொழிப்புரை:

பூங்கொத்துக்களைத் தரித்த கூந்தலையுடையவள் உமாதேவி. அவளுடன் வந்து அருச்சுனனுக்கு பாசுபதம் கொடுத்து அருள்புரிந்தான் இறைவன். அவன் நற்குணமுடைய வேடவடிவினன். மேலானவன். சுயம்புமூர்த்தி. அத்தகைய சிவபிரான் ஊமத்தமலரையும், பிறைநிலாவையும் நாகத்தையும் திருமுடியில் அணிந்துகொண்டு என் எளிய உள்ளம் புகுந்து உறைகின்றான். அதனால் புத்தர், அமணர் இவர்களை வாதத்தில் வென்று அழியும்படிச் செய்யவல்ல பெருமை பொருந்திய திருநீற்றுச்செம்மை நெறியே அடியார்களாகிய நமக்கு உறுதியாக நல்லவாகும். முற்கூறிய யாவும் அடியார்கட்கு நல்லனவே. நல்லனவே.

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல்துன்னி வளர்செம்பொன் எங்[கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து மறைஞானஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரைவந்து நலியாதவண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள்வானில் அரசாள்வர் ஆணை நமதே. (11)

பொழிப்புரை:

சீகாழிப்பதி தேன் நிறைந்த சோலைகளால் சூழப்பெற்றது. கரும்பாலைச் சாற்றால் விளைகின்ற செந்நெற் பயிர்கள் மிக்கது. அவைகள் நெருங்கி வளர்ந்து செம்பொன் மயமாக சிவபிரானை நினைவுறுத்துவபோல் எங்கும் செந்நெற் கதிர்களை ஈன்று காட்சியளிக்கின்றன. அத்தகைய வளமுடைய புகலியில் நான்முகன் முதலான தேவர்கள் வந்து இறைவனை பூசித்துப் பேறுபெற்றார்கள். அதனால் பிரமாபுரம் எனும் பெயருடையதாயிற்று அவ்வூர். அவ்வூரில் திருவவதாரம் செய்தவர் கலைஞானமுடன் சிவஞானமும் பெற்ற திருஞானசம்பந்தர். அவர் நான்மறை அந்தணர். அப்பெருமான் வினைப்படி வந்து தாக்குகின்ற நாள்களும், கோள்களும் அடியார்களைத் துன்புறுத்தாவண்ணம் இக்கோளறு பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளினார். இச்சொல் மாலையை நாடோறும் அன்புடன் ஓதும் அடியார்கள் இம்மையில் துயர் நீங்கப்பெற்று நலமெய்துவர். மறுமையில் தேவர் உலகம் சென்று அரசாள்வார்கள். இது எம்முடைய ஆணை (சத்தியம்).

திருச்சிற்றம்பலம்.

"காளமேகந் நிறக்காலனோடந்தகன் கருடனும்
நீளமாய்நின் றெய்தகாமனும் பட்டன நினைவுறின்
நாளுநாதன் னமர்கின்ற நாகேச்சர நண்ணுவார்
கோளுநாளுந் தீயவேனு நன்காங் குறிக்கொண்மினே."

"வேள்படுத்திடு கண்ணினன் மேருவில் லாகவே
வாள ரக்கர்பு ரமெரித் தான்மங்கலக்குடி
ஆளு மாதிப்பி ரானடி கள்ளடைந் தேத்தவே
கோளு நாளவை போயறுங் குற்றமில்லார்களே."

—*திரு. ஞா. ச. தேவாரம்.*

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

இக் கோளறு திருப்பதிகப் பாடல்களை அனைவரும் வாசித்து நற்பயனை அடையவேண்டும் என்ற நோக்கோடு இதனை அச்சிட்டு இலவசமாக வழங்கியுள்ளேன். இந்நூலின் பதிப்பாசிரியர் வி த் து வா ன் திரு. க. **சம்பந்தம்** அவர்கள் அநேக அலுவல்களுக்கிடையே பாடல்களுக்கு பொழிப்புரைகள் எழுதித்தந்து உதவி பல புரிந்தமைக்கு என்னுடைய நன்றியை முதற்கண் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடலூர்
16—12—61

தங்கள் அன்புள்ள,
T. S. சங்கரசுப்பிரமணியம்.

கிருஷ்ணவிலாசம் பிரஸ், திருப்பாப்புலியூர்.